23.06.2025 S.C.No.138 of 2017 P.W.52 – Anandhakumar

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A6 present)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் மதியம் 02.15 P.M.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

கே: 19.06.2015 முதல் ஷமீல் பாஷா ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து வேலூர் மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பும் வரை சுயநினைவோடு இருந்தார் என்றால் சரிதானே?

ப: சரிதான்.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையிலிருந்து ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு அல்லது பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திற்கு Intimation கொடுத்த ஆவணங்களை தாங்கள் கைப்பற்றினீர்களா ?

ப: கைப்பற்றவில்லை.

கே: ஆம்பூர் நகர காவல் நிலையம் மற்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் ஆகியவற்றில் இருந்த Hospital Intimation Register கைப்பற்றினீர்களா?

ப: இல்லை.

கே: Hospital Intimation Register–ஐ கைப்பற்றியிருந்தால் அதில் எந்த காவல் அதிகாரி 19.06.2015 மாலை 16.30 மணிக்கு பின் ஷமீல் பாஷா மருத்துவமனையில் அனுமதித்தது குறித்த தகவலை

பெற்றார் என்பதை புலனாய்வு செய்திருக்க முடியும் என்றால் சரிதானே?

ப: மருத்துவமனை தகவல் பதிவேட்டை பார்வையிட்டேன். ஆனால் கைப்பற்றவில்லை. பார்வையிடும்போது தகவலை பெற்ற விவரம் தெரிந்தது. ஆனால் அவரை விசாரித்து வாக்குமூலம் பதியவில்லை.

கே: Hospital Intimation Register—ஐ பார்வையிட்டதாக எங்கே பதிவு செய்து வைத்துள்ளீர்கள்?

ப: 10.07.2015 அன்று வழக்கு நாட்குறிப்பில் ஆம்பூர் நகர காவல் நிலைய Hospital Intimation Register —ஐ பார்வையிட்டது தொடர்பாக பதிவு செய்துள்ளேன். பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தின் Hospital Intimation Register—ஐ பார்வையிடவில்லை. அது குறித்து வழக்கு நாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை.

கே: தாங்கள் ஆம்பூர் நகர காவல் நிலையம் மற்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் ஆகியவைகளில் உள்ள Hospital Intimation Register—ஐ ஏன் கைப்பற்றவில்லை?

ப: அதற்கான காரணம் ஏதும் இல்லை.

கே: தாங்கள் பார்வையிட்ட Hospital Intimation Register—ல் (ஆம்பூர் நகர காவல் நிலையம் மற்றும் பள்ளிக்கொண்டா காவல் நிலையம்) யார் 19.06.2015 அன்று 16.30 மணிக்கு பின்னால் தகவல் பெற்றதாக குறிப்பு உள்ளது?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய Hospital Intimation Register கைப்பற்றப்பட்டுள்ளது.

கே: 19.06.2015 மாலை 16.30 மணிக்கு பிறகு ஆம்பூர் அரசு

மருத்துவமனையிலிருந்து ஷமீல் பாஷா குறித்து தகவல் பெற்றதாக பதிவு உள்ளது ?

ப: ஷமீல் பாஷா குறித்து எந்த தகவலும் பதிவு செய்யப்படவில்லை.

கே: குறிப்பாக 19.06.2015 அன்றைய தேதிய பதிவுகள் உள்ளதா என்றால் ?

ப: இல்லை.

கே: அப்படியானால் தங்களின் புலன் விசாரணையில் 19.06.2015 மாலை 16.30 மணிக்கு பின்பு ஷமீல் பாஷா மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தது குறித்து யார் பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலோ அல்லது ஆம்பூர் காவல் நிலையத்திலோ தகவல் பெற்றார்கள் என்பது தெரியவில்லை என்றால் ?

ப: சரிதான். புலன் விசாரணையில் தெரியவில்லை.

கே: 19.06.2015 மாலை 16.30 மணிக்கு பிறகு யார் ஷமீல் பாஷா மருத்துவமனையில் உள்நோயாளியாக சேர்ந்தது குறித்து தகவல் மேற்கண்ட பள்ளிக்கொண்டா மற்றும் ஆம்பூர் நகர காவல் நிலையங்களுக்கு தகவல் சொன்னார்கள் என்று புலன் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்களா?

ப: அது குறித்து விசாரித்து வாக்குமூலம் எதையும் பதிவு செய்யவில்லை.

கே: 19.06.2015 அன்று 16.30 மணிக்கு பின்னால் சுயநினைவோடு இருந்த ஷமீல் பாஷாவிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யாததற்கு யார் பொறுப்பு?

ப: பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு அலுவலர் SSI சிங்காரம் ஆவார்.

கே: எஸ்எஸ்ஐ சிங்காரம் அவர்களை ஷமீல் பாஷாவை மருத்துவமனை அனுமதித்தது குறித்து கேட்டு ஏன் வாக்குமூலம் ஷமீல் பாஷாவிடமிருந்து பெறவில்லை என்பதற்கான காரணத்தை பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: அவர் வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை.

கே: 19.06.2015 அன்று மாலை 16.30 மணிக்கு உள்நோயாளியாக இருந்த ஷமீல் பாஷா எத்தனை மணிக்கு காணாமல் போனார் (Absconding) என்பதனை புலன் விசாரணை செய்து பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: பதிவு செய்யவில்லை.

கே: ஷமீல் பாஷாவின் மாமனாரான கௌஷ் பாஷாவிடம் 19.06.2015 அன்று மாலை 16.30 மணிக்கு பின்னால் ஷமீல் பாஷா யாருடைய பொறுப்பில் இருந்தார் என்பதனை கேட்டு பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: பதிவு செய்யவில்லை.

கே: 20.06.2015 காலை ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் கௌஷ் பாஷாவிடம் ஷமீல் பாஷாவை தேடிக்கொண்டிருப்பதாக கூறியதை தாங்கள் கௌஷ் பாஷாவின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் பதிவு செய்து வைத்திருக்கிறீர்கள். அப்படியானால் 19.06.2015 அன்று இரவே Absconding ஆகிவிட்டார் என்பதுதானே பொருள்?

ப: ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் கௌஷ் பாஷாவிடம் 20.06.2015 அன்று காலை ஷமீல் பாஷாவை தேடிக்கொண்டிருக்கிறோம் என்று சொன்னதற்கு முன்பு அவர்

மருத்துவமனையில் Admit ஆனதற்கு பின்பு இடைப்பட்ட காலத்தில் Absconding ஆகியிருக்கிறார்.

கே: எத்தனை மணிக்கு Absconding ஆன ஷமீல் பாஷா மருத்துவமனைக்கு வந்ததாக ஆம்பூர் அரசு மருத்துவமனை ஆவணங்கள் கூறுகின்றன?

ப: 20.06.2015 அன்று மாலை 04.00 மணிக்கு Male ward ல் இருந்ததாக பதிவுகள் உள்ளன.

கே: அப்படியானால் Male Ward–ல் இருந்த செவிலியரையோ அல்லது வார்டு பொறுப்பாளரையோ விசாரணை செய்து Male ward ல் இருந்தார் என்பதை பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனை Male ward–ன் பொறுப்பாளர்களையோ செவிலியர்களையோ Absconding ஆன ஷமீல் பாஷா அந்த குறிப்பிட்ட Male Ward–ல் தான் இருந்தார் என்பதற்கான வாக்குமூலம் ஏதாவது பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: இல்லை.

கே: அ.த.சா.ஆ.48 ல் 20.06.2015 என்று தேதியிட்ட மருத்துவ அறிக்கையில் 20/06 (Duty MO) என்று எழுதி அதன் கீழ் 9 P.M என்று எழுதி அதனை 4 P.M என்று அடித்தல் திருத்தலோடு எழுதி உள்ளதா பார்த்து சொல்லுங்கள்?

ப: 4 P.M என அடித்து எழுதப்பட்டுள்ளது.

கே: அவ்வாறு அடித்தல் திருத்தலுடன் எழுதிய மருத்துவரிடம் மேற்கண்ட அடித்தல் திருத்தல் குறித்து கேட்டு வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்களா?

ப: அது குறித்து வாக்குமூலம் பதியவில்லை.

கே: தங்களால் 02.07.2015 பதிவு செய்யப்பட்ட கௌஷ் பாஷாவின் கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தின் 4 வது பக்கத்தில் மேலிருந்து 18 வது வரியில் "20.06.2015 ம் தேதி காலை நாங்கள் ஆம்பூர் டவுன் இன்ஸ்பெக்டரிடம் ஷமீல் பாஷா அட்மிட் பற்றி தகவல் சொன்னோம் அதற்கு இன்ஸ்பெக்டர் ஷமீல் பாஷாவை நாங்களே தேடிக்கினு இருக்கிறோம் என்று சொன்னதால்" என்று உள்ளதா என்றால் ?

ப: உள்ளது.

கே: மேற்கண்ட அதே கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் மேற்கண்ட வாசகங்களை தொடர்ந்து "ஷமீல் பாஷாவை நாங்களே தேடிக்கினு இருக்கிறோம் என்று சொன்னதால் நானே நேரடியாக அவரை அழைத்துச்சென்று மருத்துவமனையில் ஷமீல் பாஷாவை காட்டினேன்" என்று உள்ளதா என்றால்?

ப: உள்ளது.

கே: அது குறித்து ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளரிடம் விசாரணை செய்து ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு சென்றீர்களா. அங்கு ஷமீல் பாஷா இருந்தாரா இல்லையா அதில் உள்ள உண்மை என்ன என்று புலன் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: ஆம்பூர் நகர காவல் ஆய்வாளரை நான் விசாரிக்கவில்லை, வாக்குமூலம் வாங்கவில்லை.

கே: 02.07.2015–க்கு பிறகு ஆம்பூர் அரசு மருத்துவமனையில் 20.06.2015 பணியில் இருந்த மருத்துவரை விசாரணை செய்து கௌஷ் பாஷா சொல்லியது உண்மையா மேலும் ஆம்பூர் நகர

காவல் நிலைய ஆய்வாளர் மருத்துவமனைக்கு வந்து ஆய்வு செய்தாரா என்பது குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்களா?

ப: மருத்துவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேற்கண்ட தகவல்களை பதிவு செய்யவில்லை.

கே: ஏற்கனவே கேட்ட கேள்வியின்போது தாங்கள் ஆம்பூர் டிஎஸ்பி கணேசன் அவர்கள் ஷமீல் பாஷாவின் மருத்துவ ஆவணங்கள் குறித்து மருத்துவமனையிலிருந்து ஆவணங்களை பெற்று A1–ஐ விசாரணை செய்தது குறித்து தெரியாது என பதில் அளித்துள்ளீர்கள். அதனால் மேற்கண்ட டிஎஸ்பி கணேசன் அவர்களின் மூலம் இந்த நீதிமன்றத்தில் எ.த.சா.ஆ.6–ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணத்தையும், அ.த.சா.ஆ.48–ஐயும் ஒப்பிட்டுப் பார்த்து வேறுபாடு உள்ளனவா என்று சொல்லுங்கள்?

ப: இருக்கிறது.

கே: 19.06.2015 அன்று மாலை 16.30 மணி முதல் மறுநாள் காலை 11.00 மணி வரை யார் ஷமீல் பாஷாவிற்கு Attender–ஆக இருந்தார்கள் என்று கேட்டு வாக்குமூலம் பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

கே: அ.த.சா.ஆ.48 ல் யார் 20.06.2015 என்று எழுதி கோடிட்டு அதற்குக் கீழே To cancel absconding என்று எழுதியது?

ப: அது குறித்து நான் விசாரிக்கவில்லை.

கே: ஆம்பூர் அரசு மருத்துவமனையில் 19.06.2015 அன்று 16.30 மணிக்கு பின்னால் Male ward ல் ஷமீல் பாஷா இருந்ததாகவோ அல்லது 20.06.2015 காலை அங்கு இருந்ததாகவோ Male ward–ல்

பாதுகாவலர் அல்லது பொறுப்பு செவிலியர் அல்லது பொறுப்பு மருத்துவர் ஆகியோரிடம் கேட்டு வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: 20.06.2015 அன்று காலை 07.30 மணிக்கு பிறகு ஷமீல் பாஷா உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ள வார்டின் பொறுப்பு மருத்துவர் யார் என்று கேட்டு வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: தாங்களால் பெறப்பட்ட ஆவணமான அ.த.சா.ஆ.48 ல் ஷமீல் பாஷா Absconding குறித்து பதிவுகள் உள்ளதால் அந்த பதிவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதா?

ப: முதல் தகவல் அறிக்கை ஏதும் பதிவு செய்யப்படவில்லை.

கே: ஷமீல் பாஷாவின் Absconding குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாததின் காரணத்தை ஆம்பூர் நகர காவல் நிலையத்திலோ அல்லது பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலோ உள்ள பொறுப்பு அதிகாரிகளாக இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளீர்களா?

ப: இல்லை.

கே: மேற்கண்ட ஷமீல் பாஷாவின் மருத்துவமனை ஆவணங்கள் பெற்ற பிறகு அதில் குறிப்பிட்டுள்ள Absconding குறித்தும் அதன் மீது யார் யாரை விசாரித்தேன் என்பது குறித்தும் தங்களின் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா?

ப: இல்லை.

கே: தங்களுக்கு முன்பாக இந்த வழக்கில் முதல் விசாரணை அதிகாரியான வேப்பங்குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.கோவிந்தசாமி அவர்கள் இருந்தார்கள் என்பதனை ஒப்புக்கொள்கிறீர்களா?

ப: ஒப்புக்கொள்கிறேன்.

கே: மேற்கண்ட கோவிந்தசாமி எந்த ஆணையின் கீழ் பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளராக செயல்பட்டார் என்பதை ஆவணங்களின் மூலம் காட்டுங்கள்?

ப: எந்த ஆவணமும் என் விசாரணையின்போது வழக்குக்கோப்பில் சமர்ப்பிக்கப்படவில்லை.

கே: கோவிந்தசாமி பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்ற 19.06.2015 இரவு நியமிக்கப்பட்டதன் ஆணைகளை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்திலோ அல்லது அவரது உயர் அதிகாரியான டிஎஸ்பி கணேசன் அவர்களின் அலுவலகத்திலோ கேட்டு பெற்றீர்களா?

ப: இல்லை.

கே: ஒரு காவல் நிலையத்தினுடைய பொறுப்பு அதிகாரியாக செயல்படுவதற்கு உயர் அதிகாரிகளின் எழுத்து மூலமான ஆணை தேவையா?

ப: கண்டிப்பாக வேண்டும்.

கே: அவ்வாறு எந்த ஆணையும் உயர் அதிகாரிகளால் கோவிந்தசாமி அவர்களுக்கு வழங்கப்படாத நிலையில் அவரது ஆய்வாளர் என்ற நிலையில் செய்த செயல்பாடுகள் சட்டத்திற்குட்பட்டதா?

ப: அவசர காலங்களில் சில நேரங்களில் வாய்மொழியாக உயர் அதிகாரிகளால் ஆணை வழங்கப்படும்.

கே: 26.06.2015 இரவு முதல் 01.07.2015 இரவு வரை ஆகிய ஆறு நாட்கள் வேப்பங்குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் திரு.கோவிந்தசாமி பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணியாற்றியது குறித்து ஏதேனும் 26.06.2015 க்கு பின்னிட்ட ஆணை (Ratification) ஏதேனும் வழங்கப்பட்டுள்ளதா?

ப: இல்லை.

கே: உயர் அதிகாரிகளின் சட்டப்படியான எழுத்து மூலமான ஆணைகள் பள்ளிக்கொண்டா காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக பணியாற்ற ஆணைகள் இருக்கிறதா என்று கோவிந்தசாமி அவர்களிடம் கேட்டு வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: அவரை நான் விசாரிக்கவில்லை. வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

கே: Without any authority from the Higher authorities to act as a Inspector for Pallikonda Police Station, can Govindhasamy file an FIR?

ப: வாய்மொழி உத்தரவின் பேரில் பொறுப்பினை ஏற்று பதிவு செய்திருந்தார்.

கே: கோவிந்தசாமி அவர்ளின் கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தை பார்த்து சொல்லுங்கள் ஆய்வாளர் கோவிந்தசாமியை வாய்மொழி உத்தரவின் அடிப்படையில் பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்றினேன் என்று உள்ளதா?

ப: அவ்வாறு அவரது கு.வி.மு.ச. பிரிவு 161 வாக்குமூலத்தில் இல்லை.

கே: கோவிந்தசாமிக்கு சட்டப்படியான ஆணையை பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளராக பணியாற்ற ஆணையிடாதபோது

பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தின் டிஎஸ்பி கணேசன் அவர்களை கோவிந்தசாமி அவர்கள் பள்ளிக்கொண்டா ஆய்வாளர் பொறுப்பு வாய்மொழியாக வழங்கப்பட்டதா என்று கேட்டு உறுதி செய்தீர்களா ?

ப: அவரை நான் விசாரிக்கவில்லை.

கே: அதனால் கோவிந்தசாமி அவர்கள் அவருக்கு சட்டப்படியான ஆணையில்லாமல் பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளராக செயல்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது ஆகியவை சட்ட விரோதமானது என்றால் ?

ப: சரியல்ல.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளருக்கு முகவரியிடப்படாத புகாரினை பெறுவதற்கும் அதன் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கும் கோவிந்தசாமி ஆய்வாளருக்கு அதிகாரம் உள்ளதா?

ப: புகார் நேரடியாக கொடுக்கப்படும்பட்சத்தில் அதிகாரம் உள்ளது.

கே: பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளருக்கு முகவரியிடப்படாத ஒரு புகாரை பெறுவதற்கு பள்ளிக்கொண்டா காவல் நிலைய ஆய்வாளருக்கு அதிகாரம் உள்ளதா?

ப: சம்பவ இடம் அவரின் காவல் நிலைய எல்லைக்குட்பட்டிருந்தால் அதிகாரம் உள்ளது.

கே: எந்த புகாரையும் எவருக்கு முகவரியிடப்பட்டிருந்தாலும் அதனை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம் என்று எந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது?

ப: எந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு நினைவில்லை.

கே: எந்த புகாரையும் எவருக்கு முகவரியிடப்பட்டிருந்தாலும் அதனை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யலாம் என்று எந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை PSO–ஐ பார்த்து கூறுங்கள்?

ப: PSO–ல் 551–ல் புகாரை பெற்றவுடன் தாமதமில்லாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும் என்று உள்ளது. அதே PSO–ல் 551–ல் மேற்குறித்த கேள்விக்கான வாசகங்கள் இல்லை.

கே: ஆய்வாளர் கோவிந்தசாமி எத்தனை புகார்கள் பெற்றார்?

ப: வழக்குக்கோப்பில் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையில் இரண்டு புகார்கள் உள்ளன. அதேபோல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததில் இரண்டு புகார்கள் உள்ளன.

கே: கோவிந்தசாமி அவர்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பிய 01.07.2015 தேதியிட்ட படிவத்தில் வரிசை எண் 16–ல் எ.த.சா.ஆ.15 (எ.த.சா.ஆ.1) "K.M. அலி அக்பர் புகார் மனு (முதல் புகார் மனு)" என்று உள்ளதா என்றால் ?

ப: இருக்கிறது.

கே: எ.த.சா.ஆ.1 கோவிந்தசாமி அவர்களால் முதல் புகார் என போடப்பட்டுள்ளது. அதில் யார் யார் பெயரை குறிப்பிட்டு புகார் கொடுக்கப்பட்டுள்ளது?

ப: யாருடைய பெயரையும் குறிப்பிட்டு புகார் கொடுக்கப்படவில்லை.

கே: ஏன் முதல் புகாரைக்கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்ற காரணத்தை கோவிந்தசாமியிடம் கேட்டு வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: அவரை நான் விசாரிக்கவில்லை.

கே: 01.07.2015 நீதிமன்றத்திற்கு கோவிந்தசாமி அவர்களால் அனுப்பப்பட்ட ஆவணங்கள் வரிசை எண் 17ல் "N.K.கௌஷ் பாஷா, வயது/50, S/o. ஜியாவூதீன் கொடுத்த. ( மூன்றாவது புகார்) என்று உள்ளதா ?

ப: உள்ளது.

கே: எ.த.சா.ஆ.1 யாருக்கு முகவரியிடப்பட்டுள்ளது ?

ப: ஆய்வாளர், ஆம்பூர் நகர காவல் நிலையத்திற்கு.

கே: எ.த.சா.ஆ.1ல் ஆம்பூர் நகர காவல் நிலைய ஆய்வாளர் கையொப்பமோ சுருக்கோப்பமோ அல்லது ஏதேனும் குறிப்புகளோ அல்லது அந்நிலையத்தின் அலுவலக முத்திரையோ உள்ளதா ?

ப: இல்லை.

கே: எ.த.சா.ஆ.1ல் ஆம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் புகாரினை பெற்று அதனை தபால் மூலமாக அனுப்பியதற்கான ஏதேனும் கோப்பு எண்கள் மற்றும் தேதி (File number and date) ஏதேனும் செயல்முறை ஆணை எண்கள் (Proceedings) ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா ?

ப: இல்லை.

கே: மேற்கண்ட தகவல்கள் எ.த.சா.ஆ.1ல் இல்லாதபோது இந்த முதல் புகார் எவ்வாறு எந்த நிலையில் பெறப்பட்டது என்பது குறித்து கோவிந்தசாமியிடம் கேட்டு பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: கோவிந்தசாமி ஆய்வாளரை நான் விசாரிக்கவில்லை. அவரிடம் வாக்குமூலம் நான் பதியவில்லை.

கே: எ.த.சா.ஆ.1ல் பள்ளிக்கொண்டா காவல் நிலைய முத்திரை அல்லது கோவிந்தசாமி அவர்களின் கையெழுத்தோ சுருக்கோப்பமோ உள்ளதா?

ப: இல்லை.

கே: ஆதலால் இந்த முதல் புகார் நாள் 26.06.2015 அன்று பெற்றதற்கான எந்த குறிப்பும் இல்லாததால் இதனை பெற்ற கோவிந்தசாமி அவர்கள் முதல் புகாரை மறைத்து இரண்டாவது புகாரினை எதிரிகளினுடைய பெயரையும் சேர்த்து கொடுக்கும்படி அறிவுரை கூறி முஸ்லீம் அமைப்புகளுடன் கைகோர்த்து அந்த அமைப்பின் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும் என்ற உள்நோக்கத்துடன் இரண்டாவது புகாரினை தயாரித்து கொடுக்கும்படி பெற்று அதனை முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்திருக்கிறார் என்றால்?

ப: சரியல்ல.

கே: கோவிந்தசாமி ஆய்வாளர் அவர்களால் அலி அக்பரிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவு 161 வாக்குமூலத்தில் உள்ள தகவல்களை புலன் விசாரணை செய்தீர்களா?

ப: ஆய்வு செய்தேன். இது குறித்து அலி அக்பரிடம் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. நான் பதிவு செய்த வாக்குமூலத்திலும் கோவிந்தசாமியிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் குறித்து கூறவில்லை.

கே: வழக்குக்கோப்பில் அலி அக்பரின் வாக்குமூலம் இருந்ததை பார்த்தீர்களா?

ப: பார்த்தேன்.

கே: அப்படியானால் கோவிந்தசாமியிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கு அலி அக்பரிடம் கேட்டு அதற்கான பதிலை பதிவு செய்திருக்கிறீர்களா?

ப: நான் அவரிடம் கேட்டபோது அவர் என்னிடம் என்ன கூறினாரோ அந்த பதிலை நான் வாக்குமூலமாக பதிவு செய்தேன்.

கே: கோவிந்தசாமி பதிவு செய்த அலி அக்பரின் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முஸ்லீம் அமைப்பின் பொறுப்பாளர்களாக குறிப்பிடப்பட்டிருக்கிறவர்களை விசாரித்தீர்களா?

ப: அவர்களை நான் விசாரிக்கவில்லை.

கே: அலி அக்பரின் கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் த.மு.மு.க கட்சியை சேர்ந்த ஆம்பூர் எம்எல்ஏ அஸ்லாம் பாஷாவுடன் இருக்கும் த.மு.மு.க முக்கிய பொறுப்பில் உள்ள ஷமீல் அகமதுவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: த.மு.மு.க கட்சியை சேர்ந்த ஆம்பூர் எம்எல்ஏ அஸ்லாம் பாஷாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தீர்களா?

ப: இல்லை.

கே: த.மு.மு.க கட்சியை சேர்ந்த ஆம்பூர் எம்எல்ஏ அஸ்லாம் பாஷாவையும் அவருடன் முக்கிய பொறுப்பில் இருக்கும் ஷமீல் அகமது என்பவரையும் விசாரிக்காமல் மேற்கண்ட எம்எல்ஏ மற்றும் முஸ்லீம் அமைப்புகளுக்கு உதவி வேண்டும் என்ற எண்ணத்தோடு அஸ்லாம் பாஷாவையும், ஷமீல் அகமதுவையும் தாங்கள் விசாரிக்கவில்லை என்றால்?

ப: சரியல்ல.

கே: மேற்கண்ட அஸ்லாம் பாஷாவையும் ஷமீல் அகமதுவையும் விசாரித்து எதிரிகளினுடைய பெயர் எவ்வாறு தெரியும் என்று கேட்க வேண்டிய பொறுப்பு புலன் விசாரணை அதிகாரியான தங்களுக்கு உண்டு என்றால்?

ப: பொறுப்பு உள்ளது. ஆனால் அவர்களை நான் விசாரிக்காததால் அதைப்பற்றி பதிவு செய்யவில்லை.

1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 05.40 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.06.23 18:12:04 +0530